B

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி **பொருளியல்** மதிப்பெண்கள்:90

பகுதி - அ

I சரியான விடையைத் தெரிவு செய்க 20x1=20

1. திறந்து விடப்பட்ட பொருளாதாரத்தின் வட்ட ஓட்ட மாதிரி என்பது ______ ஆகும்.
அ) இருதுறை மாதிரி ஆ) முத்துறை மாதிரி
இ) நான்கு துறை மாதிரி ஈ) மேலே சொல்லப்பட்ட அனைத்தும்
2. ______ ஆல் தேசிய வருவாயை வகுத்தால் தலைவீத வருமானம் கண்டறியலாம்
அ) உற்பத்தி ஆ) நாட்டின் மக்கள் தொகை
இ) செலவு ஈ) GNP
3. PQLI என்பது ______ ன் குறியீடு ஆகும்.
அ) பொருளாதார வளர்ச்சி ஆ) பொருளாதார நலன்
இ) பொருளாதார முன்னேற்றம் ஈ) பொருளாதார மேம்பாடு
4. மறைமுக வேலையின்மையில், உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி
அ) பூஜ்யம் ஆ) ஒன்று இ) இரண்டு ஈ) நேர்மறை
5. வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் பற்றிய கீன்ஸின் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துரு ______ ஆகும்.
அ) தொகு தேவை ஆ) தொகு அளிப்பு
இ) விளைவுத் தேவை ஈ) இறுதி நிலை நுகர்வு விருப்பு
6. MPC ஐயும் MPS ஐயும் கூட்டினால் கிடைப்பது
அ) 1 ஆ) 2 இ) 0.1 ஈ) 1.1
7. மிகைப் பெருக்கி (Super Multiplier) என்ற கருத்தை முதன் முதலில் பயன்படுத்தியவர்
அ) J.R. ஹிக்ஸ் ஆ) R.D.G. ஆலன் இ) கான் ஈ) கீன்ஸ்
8. MV=PT என்ற சமன்பாட்டில், V என்பது
அ) வாணிபத்தின் அளவு ஆ) பணத்தின் சுழற்சி வேகம்
இ) ரொக்கப் பணத்தின் அளவு ஈ) வருங்கால செலுத்துதல்களுக்கான அடிப்படை
9. நிகழ்நிலை வங்கியகம் என்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது ?
அ) இ-வங்கி ஆ) இணைய வங்கி இ) ஆர்.டி.ஜி.எஸ் ஈ) நெப்ட்
10. பண மாற்று வீதம் நிர்ணயமாகும் சந்தை
அ) பண சந்தை ஆ) அந்நிய செலாவணி இ) பங்கு சந்தை ஈ) மூலதன சந்தை
11. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை ?
அ) வங்கி ஆ) அணு ஆற்றல் இ) மருந்து உற்பத்தி ஈ) காப்பீடு
12. ஐபிஆர்டி இவ்வாறாகவும் அழைக்கப்படுகிறது ?
அ) பன்னாட்டு பண நிதியம் ஆ) உலக வங்கி
இ) ஆசியான் ஈ) பன்னாட்டு நிதிக் கழகம்
13. GST இதற்கு சமம் ?
அ) விற்பனை வரி ஆ) தொழிற் குழும வரி இ) வருமான வரி ஈ) உள்ளாட்சி வரி
14. பற்றாக்குறை நிதியாக்கத்தின் அடிப்படை நோக்கமாவது
அ) பொருளாதார முன்னேற்றம் ஆ) பொருளாதார நிலைத்தன்மை
இ) பொருளாதார சமத்துவம் ஈ) வேலை வாய்ப்பு உருவாக்குதல்
15. சூழலியல் என்பது எந்த ஒன்றின் சிறிய பகுதி ?
அ) அயனோஸ்பியர் ஆ) லித்தோஸ்பியர் இ) பையோஸ்பியர் ஈ) மெஸ்ஸோஸ்பியர்

www.Padasalai.Net www.TrbTnpsc.com



16. அமில மழை ______ விளைவுகளில் ஒன்று.
அ) காற்று மாசு ஆ) நீர் மாசு இ) நிலமாசு ஈ) ஒலி மாசு
17. "அடிமைத்தனத்திற்கான பாதை" என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?
அ) பிரடெரிக் ஹேயக் ஆ) ஜெ.ஆர்.ஹக்ஸ்
இ) டேவிட் ரிக்கார்டோ ஈ) டி.ஆர்.மால்தஸ்
18. நிதி அயோக்கின் (NITI Aayog) சரியான ஆங்கில விரிவாக்கம்
அ) National Institute to Transform India
ஆ) National Institute for Transforming India
இ) National Institution to Transform India
ஈ) National Institution for Transforming India
19. கேள்வித் தாள் மூலம் புள்ளி விவரம் திரட்டப்பட்டால் அது ______
அ) முதல்நிலை விவரம் ஆ) இரண்டாம் நிலை விவரம்
இ) வெளியிடப்பெற்ற விவரம் ஈ) தொகுக்கப்பட்ட விவரம்
20. பொருளாதார அளவையியல் என்பது எதன் இணைப்பு?
அ) பொருளியல் மற்றும் புள்ளியியல் ஆ) பொருளியல் மற்றும் கணிதம்
இ) பொருளியல், கணிதம் மற்றும் புள்ளியியல் ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல

## பகுதி – ஆ

**II ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்**
**வினா எண் – 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்** **7x2=14**

21. GDP குறைப்பான் இலக்கணம் தருக.
22. பெருக்கி வரையறு.
23. நெகிழ்ப்பணம் என்றால் என்ன? உதாரணம் தருக.
24. கடன் உருவாக்கம் என்றால் என்ன?
25. செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன?
26. "வரி", "கட்டணம்" வேறுபடுத்துக.
27. உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறு.
28. பொருளாதார திட்டமிடுதலின் வரைவிலக்கணத்தை எழுதுக.
29. புள்ளியியலின் வகைகள் யாவை?
30. ஆசியானின் (ASEAN) இரண்டு நோக்கங்களை எழுதுக.

## பகுதி – இ

**III ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளி.**
**வினா எண் – 40 க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **7x3=21**

31. இருதுறை சூழல் ஓட்ட மாதிரியினை விளக்குக.
32. J.B. சே. விதியில் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக.
33. தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.
34. பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
35. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.
36. ஐஎம்எப் (IMF) ன் கடன் வழங்கும் திட்டங்களில் ஏதேனும் மூன்றினை குறிப்பிடுக.
37. வரி விதிப்பு விதிகளை விவரிக்க.
38. இ–கழிவுகள் என்பதன் பொருள் தருக.
39. வறுமையின் நச்சு சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுப்படுத்துக.
40. புள்ளியியலின் பணிகள் யாவை?

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி – ஈ

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளி 7x5=35

41. அ) பேரினப் பொருளியலின் பரப்பெல்லை விவரி.

(அல்லது)

ஆ) உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும்.

42. அ) தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளைவிளக்குக.

(அல்லது)

ஆ) உலக வங்கியின் பணிகளை வெளிக் கொணர்க.

43. அ) வேலையின்மைகளின் வகைகளை விவரி.

(அல்லது)

ஆ) பொது நிதியின் எல்லைகளை விளக்கு.

44. அ) மூலதனத்தின் இறுதி நிலை உற்பத்தித் திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தித் திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை ?

(அல்லது)

ஆ) நிதிக் கொள்கைகளின் கருவிகள் எவை ? விளக்குக.

45. அ) வணிக சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) நீடித்த அல்லது வளம் குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக.

46. அ) வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக.

(அல்லது)

ஆ) பல்வேறு வகையான திட்டமிடல் வகைகளை விவரி.

47. அ) பணக் கொள்கையின் நோக்கங்கள் யாவை ?

(அல்லது)

ஆ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்ஸனின் ஒட்டுறவுக் கெழுவினைக் கண்டறிக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேவை X | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| விற்பனை Y | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

***/***

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

12

# VELLORE DISTRICT
## அரையாண்டுத் தேர்வு – டிசம்பர் - 2023
## பொருளியல்
## KEY ANSWER

*PREPARED BY*
**C.SUDHAKAR** GBHSS USSOOR
**K. SUDHAKAR** GHSS PANAMADANGI

1.இ) நான்கு துறை மாதிரி
2.ஆ) நாட்டின் மக்கள் தொகை
3.ஆ) பொருளாதார நலன்
4. அ) பூஜ்யம்
5.இ) விளைவு தேவை
6.அ) ஒன்று
7.அ) ஜே ஆர் ஹிட்ஸ்
8.ஆ) பணத்தின் சுழற்சி வேகம்
9.ஆ) இணைய வங்கி
10.ஆ) அந்நிய செலாவணி
11.ஆ) அணு ஆற்றல்
12.ஆ) உலக வங்கி
13.அ) விற்பனை வரி
14. அ) பொருளாதாரம் முன்னேற்றம்
15.இ) பையோஸ்பியர்
16.அ) காற்று மாசு
17.அ) பிரடெரிக் ஹேயக்
18.ஆ) National Institute for Transforming India
19.அ) முதல்நிலை விவரம்
20.இ) பொருளியல் கணிதம் மற்றும் புள்ளியியல்

### பகுதி-ஆ

21. GDP குறைப்பான் = பண மதிப்பு GDP/உண்மை GDP×100

22. தேசிய வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என்று வரையறுக்கலாம் எனவே பெருக்கி. $K=\Delta y/\Delta I$ என உள்ளது

23. நெகிழிப் பணம் காகித பணத்திற்கு மாற்றாக உள்ளது. இது நெகிழி அட்டையால் உருவாக்கப்பட்டிருக்கும் **எ.கா**. ரொக்க அட்டை, கடன் அட்டை, பற்று அட்டை, வணிக நிறுவன அட்டை, அந்நிய செலாவணி அட்டை மற்றும் சூட்டிகை அட்டை.

24. கடன் உருவாக்கம் என்பது கடன்களையும் முன் பணம் அளிப்பினையும் அதிகரிக்கும் ஒரு செயல். மொத்த பண அளிப்பில் கடன் பணத்தின் அளவினை அதிகரிப்பது கடன் உருவாக்கும் ஆகும்.

25. செலாவணி மாற்று வீதம் என்பது அயல்நாட்டு பண அளவில் உள்நாட்டு பணத்தின் மதிப்பாகும். ஓர் அலகு அயல்நாட்டு பணத்தை பெறுவதற்கு எத்தனை அலகு உள்நாட்டு பணத்தை கொடுக்கிறோம் என்பது பணமாற்று வீதம் ஆகும்

26. 1.வரி என்பது எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராமல் அரசிற்கு கட்டாயமாக செலுத்தக் கூடியதாகும்
2. கட்டணம் என்பது கட்டாயமாக செலுத்தக் கூடியது அல்ல அரசனது சில சேவையை செய்வதற்காக வசூலிப்பதை கட்டணமாகும். **எ.கா.** ஓட்டுனர் உரிமம் வழங்குவதற்காக வசூலிப்பது கட்டணமாகும்.

27. பசுமை இல்ல வாயுக்கள் காரணமாக உலகின் சராசரி வெப்பநிலை அதிகரித்து வருவது உலக வெப்பமயமாதல் எனப்படுகிறது

28. பொருளாதார திட்டமிடல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகளை அடைய உரிய பொறுப்பில் உள்ளவர்கள் நிதானமாக சிந்தித்து இருக்கக்கூடிய பொருளாதார வளங்களை அதிக அளவில் பயன்படுத்த சுட்டிக்காட்டும் வழிமுறைகள் ஆகும். **டால்டன்**

29. புள்ளியியலில் இரு வகைகள் உள்ளன. அவை 1.விவரிப்பு புள்ளியல் மற்றும் 2. உய்த்துணர்வு புள்ளியல் ஆகும்

www.Padasalai.Net

30. பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி மற்றும் பண்பாட்டு மாற்றத்தை துரிதப்படுத்துவது ஐ.நா. சபையின் கொள்கைகளை கடைப்பிடித்து தென்கிழக்கு ஆசிய பகுதியில் அமைதி மற்றும் உறுதியான அரசியல் சூழ்நிலையை மேம்படுத்துவது.

## பகுதி- இ

31. **1.இல்லத்துறை:** இது உற்பத்தி காரணிகளை அளிக்கும் துறையாகும் இதன் மூலம் வருவாயை பெறுகிறது மற்றும் அதன் வருவாயை நிறுவனத் துறை தயாரிக்கும் பொருட்கள் பணிகளை வாங்க பயன்படுத்துகிறது

**2. நிறுவனத்துறை:** இது பொருள் மற்றும் பணிகளை விற்பனை செய்வதன் மூலம் வருவாயை ஈட்டுகிறது இல்லத்துறைக்கு சொந்தமான உற்பத்தி காரணிகளை பணியமர்த்துகிறது

32. 1. அதிக உற்பத்திக்கு மற்றும் வேலையின்மைக்கு வாய்ப்பில்லை.

2.நாட்டில் பயன்படுத்தாத வளங்களை முழுமையாக பயன்படுத்தி முழு வேலை வாய்ப்பை அடைதல்

3. விலை கருவி தானாக செயல்படுவதால் அரசின் தேவை இல்லை

4. சேமிப்பு மற்றும் முதலீட்டு சமநிலை வட்டி வீதம் மாற்றத்தால் தீர்மானிக்கப்படும்

5. பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும்

33.

| தன்னிச்சியான முதலீடு | தூண்டப்படுகிற முதலீடு |
|---|---|
| தன்னிச்சையானது | திட்டமிடப்பட்டது |
| வருவாயை பொறுத்து நிகழாதது | வருவாயை பொறுத்து நெகிழ்வது |
| நல நோக்க முடியாது | இலாப நோக்கமுடையது |

34. 1. ரொக்க வைப்பு விகிதம்

2. ரொக்க இருப்பு வைப்பு விகிதம்

3.ரொக்க இருப்பு விகிதம்

4. சட்டப்பூர்வ நீர்மை விகிதம்

35. 1. விற்பனையை விரிவுபடுத்துதல்

2. இயற்கை வளங்களை கையகப்படுத்துதல்

3. வாணிகப் பரவலாக்கும்

4.போட்டி இடர்களை குறைத்தல்

36. அடிப்படை கடன் வசதி தற்காலிக அயல்நாட்டு செலுத்து நிலை பற்றாக்குறை பிரச்சினையை தீர்க்க இக்கடன் வழங்கப்படுகிறது

1. விரிவாக்கப்பட்ட கடன் திட்டம் அடிப்படை கடன் தொகைக்கு மேல் அதிகமாக கடன் பெற அனுமதிப்பதே விரிவாக்கப்பட்ட கடன் திட்டம்

2. ஈடு செய் கடன் திட்டம் குறைவான ஏற்றுமதி வருவாய் ஈட்டும் முதன்மை துறை பொருள் உற்பத்தியை சார்ந்திருக்கும் நாடுகளுக்கான தனிப்பட்ட கடன் திட்டமே ஈடு செய் கடன் திட்டம் ஆகும்

37. 1. செலுத்தும் திறன் பற்றிய விதி

2. நிச்சய தன்மை விதி

3. வசதி விதி

4. சிக்கன விதி

38. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் இ கழிவுகள் என்று பொதுவாக அழைக்கப்படும் மின்னணு கழிவுகள் ஏற்படுகின்றன மின்னணு சாதன பொருட்களை கழிக்கும்போதோ அல்லது மறுசுழற்சி செய்யும் போதோ இ- கழிவுகள் தோன்றும் உதாரணமாக குளிர்சாதன பெட்டிகள் காற்று சீரமைப்பபிகள் கைப்பேசிகள் கணினிகள்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

39. 1. அளிப்பின் பக்கத்தில் குறைவான உண்மை வருமானம் காரணமாக சேமிப்பு அளவு குறைகிறது இது மூலதன பற்றாக்குறையை உருவாக்குகிறது இதனால் உற்பத்தி திறன் குறைந்து வருமானம் குறைகிறது

2. தேவை பக்கத்திலிருந்து குறைவான உண்மை வருமானம் காரணமாக தேவையும் குறைவாக இருக்கும் இது முதலீட்டை குறைக்க செய்யும் இதனால் மூலதன பற்றாக்குறை ஏற்பட்டு உற்பத்தி குறைந்து வருமானத்தை குறைக்கும்

40. 1. புள்ளியல் விவரங்களை துல்லியமான வடிவில் வழங்குகிறது
2. இது பரந்த விவரங்களை சுருக்கி தருகிறது
3. இது ஒப்பீடுகளை செய்ய உதவுகிறது
4. இது எடுகோள்களை உருவாக்கவும் சோதனைக்கு உட்படுத்தவும் உதவுகிறது
5. இது மதிப்பீடுகளை செய்ய உதவுகிறது
6. கொள்கைகளை உருவாக்குவதில் இது உதவுகிறது

**41. அ)**

**1. தேசிய வருவாய்:** தேசிய வருவாய் கணக்கிடுதல் மற்றும் தேசிய வருவாயில் துறைகளின் பங்கு போன்றவை பேரியல் பொருளாதார பகுப்பாய்வின் அடிப்படை அம்சங்கள் ஆகும்.

**2. பணவீக்கம்:** பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிக்கும்.

**3. வாணிப சுழற்சி:** மொத்த பொருளாதார காரணிகளை அடிப்படையாகக் கொ ண்டு ஒரு நாட்டின் வாணிபச் சுழற்சி மாற்றங்களை தெரிந்து கொள்ள முடிகின்றது.

**4. வறுமை மற்றும் வேலையின்மை:** வளங்கள் நிறைந்த நாடுகளிலும் வறுமை மற்றும் வேலையின்மை மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. இப்பிரச்சனைக்கு தீர்வு காண வளங்களை ஒதுக்கீடு செய்யவும், சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பேரியல் பொருளியல் உதவுகிறது.

**5. பொருளாதார வளர்ச்சி:** பேரியல் பகுப்பாய்வின் மூலம் தான் ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் அதை தீர்மானிக்கும் காரணிகள் போன்றவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

**41. ஆ)**

| உள்நாட்டு வா ணிபம் | பன்னாட்டு வாணிபம் |
|---|---|
| 1. ஒரு நா ட்டிற்குள் நடைபெறும் வா ணிபம்.<br>2. பொ ருட்கள் மற்றும் பணிகள் இடம்பெயர்தல் தடை ஏதுமில்லை<br>3. ஒரே ஒரு பணம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது<br>4. புவி அமைப்பு மற்றும் காலநிலை ஒரே மாதிரி இருக்கும்<br>5. உழைப்பு மற்றும் மூலதனம் தடையில்லாமல் இடம்பெயரும். | 1. பல நா டுகளுக்கு இடையே நடைபெறும் வாணிகம்<br>2. சுங்கவரி மற்றும் பங்களவு போன்ற தடைகள் உண்டு<br>3. பல நா ட்டு பணங்கள் பயன்படுத்தப்படுகிறது<br>4. புவி அமைப்பு மற்றும் காலநிலை வேறுபடும்<br>5. உழைப்பு, மூலதனம் இடம்பெயர தடை |

**42. அ)**

**தேசிய வருவா ய் :** ஒரு குறிப்பிட்ட ஆண்டில், ஒரு குறிப்பிட்ட நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொ த்த பண மதிப்பே தேசிய வருவாய் எனப்படும்.

**1. உற்பத்தி முறை :** ஒரு நா ட்டின் விவசாயம், தொழில், வணிகம் போன்ற துறைகளில் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும். ஒவ்வொ ரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலை கணக்கில் எடுத்துக்கொ ள்ள வேண்டும்.

**2. வருவா ய் முறை :** உற்பத்தி நிலைகளில் உற்பத்தி காரணிகள் பெற்ற அனைத்துவித ஊதியங்களையும் கூட்டி தேசிய வருமானத்தைக் கணக்கிடலாம்.

**3. செலவு முறை :** ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொ த்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவா ய் கணக்கிடப்படுகிறது.

**GNP=C+I+G+(X-M)**

**C**- தனியா ர் நுகர்வு செலவு **I** - தனியா ர் முதலீட்டு செலவு

**G** - அரசின் கொள்முதல் செலவு **(X-M)** - நிகர ஏற்றுமதி

www.Padasalai.Net

**42. ஆ)**

**1. உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் முதலீட்டுக்கான கடன் உதவி.**

உறுப்பு நாடுகளின் நிலை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கு உதவி செய்கிறது.

**2. பன்னாட்டு வா ணிகத்தின் சரிவிகித வளர்ச்சி.**

உறுப்பு நாடுகள் அனைத்தும் சரிவிகித பன்னாட்டு வாணிப நீண்ட கால வளர்ச்சி அடைய உதவி செய்கிறது.

**3. கடன் மற்றும் ஈட்டுறுதி வழங்குதல்.**

முக்கியமான திட்டங்களுக்கு கடன் வழங்குவது மற்றும் பிற வழிகளில் கடன்பெற ஈட்டுறுதி வழங்குவது.

**4. வெளிநா ட்டு தனியா ர் முதலீட்டிற்கு ஊக்கம் அளித்தல்.**

தனியார் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மூலம் உறுப்பு நாடுகளுக்கு கடன் வழங்க ஈட்டுறுதிகள் வழங்கும் பணியை செய்து வெளிநாட்டு மூலதனத்துக்கு ஊக்கமளிக்கிறது.

**5. தொ ழில்நுட்ப சேவைகள்**

வாஷிங்டனில் அமைந்துள்ள பணியாளர் கல்லூரி நிபுணர்களைக் கொண்டு தொழில்நுட்ப ஆலோசனைகளையும் உறுப்பு நாடுகளுக்கு வழங்குகிறது.

**43. அ)**

**1. வாணிபச்சூழல் வேலையின்மை:** இது போதுமான அளவு விளைவுத் தேவை இல்லாதபோது நிகழ்வதாகும்.

**2. பருவகால வேலையின்மை:** ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும்.

**3. உடன்பாடில்லா வேலையின்மை:** உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் ஏற்படுகிறது.

**4. படித்தவர் வேலையின்மை:** சில நேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை.

**5. மறைமுக வேலையின்மை:** உழைப்பாளர்களின் இறுதிநிலை உற்பத்தித் திறன் பூஜியம் ஆகும்.

**43. ஆ)**

**1. பொ து வருவாய்**: அரசின் வரி மற்றும் வரி இல்லா வருமா னங்கள் பற்றியது.

**2.பொதுச் செலவு:** அரசின் செலவு பொதுச் செலவின் விளைவுகள் மற்றும் பொது செலவை கட்டுப்படுத்துதல் பற்றியது.

**3. பொ துக்கடன்:** அரசு கடன் மூலமாக பொதுமக்களிடமிருந்து அரசிற்கு பணத்தை மாற்றம் செய்கிறது

**4. நிதி நிர்வாகம்:** அரசின் வரவு செலவு திட்டத்தின் பல்வேறு பகுதிகளைப் பற்றியது.

**5. நிதிக்கொள்கை:** வரிகள், மா னியங்கள், பொ துக் கடன் மற்றும் பொ துச் செலவு ஆகியவைகள் நிதிக்கொ ள்கையின் கருவிகளாகும்.

**44. அ)**

| வ.எண் | மூலதனத்தின் இறுதி நிலை உற்பத்தி திறன்(MEC) | முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தி திறன்(MEI) |
|---|---|---|
| 1 | இது மூலதனத்தின் அளிப்பு விலையை பொ றுத்து அமைகிறது. | மூலதனத்தின் தேவையில் ஏற்பட்ட மாற்றங்கள், விலையை தூண்டும் மா ற்றத்தைப் பொ றுத்து அமைகிறது |
| 2 | ஆரம்பத்தில் உள்ள மூலதனத்தை கணக்கில் கொ ள்ளாமல் ஒவ்வொ ரு மூலதன அலகிலிருந்து கிடைக்கும் விளைவை குறிக்கிறது. | ஆரம்ப மூலதனத்திற்கு பின்னர் வந்த மூலதனத்தின் விளைவு விகிதத்தை காட்டுகிறது. |
| 3 | வரைபடத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது. | வரைபடத்தில் படுக்கை அச்சில் முதலீடு அளவு அளக்கப்படுகிறது |
| 4 | இது ஒரு "இருப்பு" கருத்துரு (stock). | இது ஒரு ஓட்டக் (FLOW) கருத்துரு. |
| 5 | ஒவ்வொ ரு வட்டிவீத அளவிலுமா ன உத்தம மூலதன இருப்பை இது நிர்ணயிக்கிறது. | கொ டுக்கப்பட்ட மூலதன இருப்பில் ஒவ்வொ ரு வட்டி வீத அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது. |

**44. ஆ)**

**1. வரி விதித்தல்:** வரிகள் மக்களிடமிருந்து வருமானத்தை அரசிற்கு மாற்றுகிறது. இது நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கும்.

**2. பொதுச் செலவு:** பொதுச் செலவு பணியா ளர்களின் கூலி மற்றும் சம்பளங்களை அதிகரிக்கும்போது பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான மொத்த தேவை உயருகிறது.

**3. பொா துக்கடன்:** அரசு, கடன் மூலமாக பொதுமக்களிடமிருந்து அரசிற்கு பணத்தை மாற்றம் செய்கிறது.

**45. அ)**

**வரைபடம்**

1. **பூரிப்பு :** அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் உச்ச நிலையில் இருக்கும்.
2. **பின்னிறக்கம் :** பணச்சந்தை நடவடிக்கைகள் சுருங்க ஆரம்பிக்கும்.
3. **மந்தம் :** மிக மோசமான கட்டம். உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் தேக்கமடையச் செய்யும்.
4. **மீட்சி :** அரசால் செய்யப்படும் முதலீடுகள் மூலம் உற்பத்தி, வேலைவா ய்ப்பு, வருவா ய், கூலி, இலாபம் ஆகியன மீட்சி பெறுகின்றன.

**45. ஆ)**

**நீடித்த வளர்ச்சியின் முக்கியத்துவம்.**

இப்போதுள்ள தலைமுறையினர் மட்டுமின்றி எதிர்காலத் தலைமுறையினரும் வாழ்வதற்குத் தேவையான வளத்தை வைத்துவிட்டு அடைகின்ற மேம்பாடு நீடித்த நிலையான மேம்பாடு. இது தலைமுறைகளுக்கு இடையேயான சமத்துவம்.

**நோக்கங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | வறுமையை ஒழித்தல். | 6 | குடிநீரும் சுகாதாரமும் அனைவருக்கும் உறுதிப்படுத்துதல். |
| 2 | பட்டினியை முடிவுக்கு கொா ண்டு வருதல். | 7 | அனைவருக்கும் தரமான வேலை வாய்ப்பினை வழங்குதல். |
| 3 | நலமான வாழ்வை உறுதிப்படுத்துதல். | 8 | நீடித்த நிலையான பொருளாதார வளர்ச்சியினை வழங்குதல். |
| 4 | தரமான கல்வியை வழங்குதல். | 9 | தேவையா ன கட்டமைப்புகளை வழங்குதல். |
| 5 | பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல். | 10 | தொழில்மயமாக்கல், புத்தாக்கங்களை ஊக்குவித்தல். |

**46. அ)**

**I. முதன்மைப் பணிகள்**

**அ. ) வைப்புகளை ஏற்றுக்கொா ள்ளுதல்.**

**(i) கேட்பு வைப்புகள்**: எப்பொா ழுது வேண்டுமா னாலும் பணத்தை பெறலாம்.

1. சேமிப்பு கணக்கு
2. நடப்பு கணக்கு

**(ii) கால வைப்புகள்**: குறிப்பிட்ட காலம் பெறமுடியா து. கூடுதல் வட்டி வழங்கப்படும்.

1. நிலை வைப்பு
2. தொா டர் வைப்பு

**ஆ) கடன் வழங்கல்:** ரொா க்க கடன், மா ற்றுச்சீட்டு தள்ளுபடி, மிகைப்பற்று.

**II. இரண்டா ம் நிலை பணிகள்**

**அ ) முகமைப் பணிகள் :**

1. காசோலைகளை பணமா க்குதல்.
2. வருமா னத்தை பெறுதல்.
3. செலவுகளை செலுத்துகிறது.

**ஆ ) பொா துப் பயன்பா ட்டு பணிகள் :**

1. பா துகாப்பு பெட்டக வசதி.
2. பயணக் காசோலை வழங்குதல்.
3. அந்நிய செலாவணியை கையா ளுதல்.
4. கடன் உறுதியளிப்பு கடிதம்.

5. பத்திரங்களுக்கு எழுத்துறுதி வழங்குதல்.
6. மின்னணு வங்கி

**இ ) இதர பணிகள் :**

1. பண அளிப்பு
2. கடன் உருவா க்கம்
3. புள்ளி விபரங்களை திரட்டுதல்.

**46. ஆ)**

**1. மக்களாட்சி திட்டமிடுதல் :** திட்டமிடுதலின் அனைத்து நிலைகளிலும் மக்கள் பங்கெடுத்துக் கொள்ளும் முறையே மக்களாட்சி திட்டமிடுதல் ஆகும்.

**2. சர்வாதிகார திட்டமிடுதல் :** பொ ருளாதாரத்தின் அனைத்து நடவடிக்கைகளும் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் முறையே சர்வா திகார திட்டமிடுதல் ஆகும்.

**3. மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல் :** திட்டம் தொ டர்புடைய நடவடிக்கைகள் மத்திய திட்டக்குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

**4. பரவலாக்கப்பட்ட திட்டமிடுதல்:** இது மத்திய திட்டக்குழுவின் கட்டுப்பாடின்றி செயல்படும் முறையாகும்.

**5. வழிகாட்டும் திட்டமிடுதல் :** இது திட்டக்குழுவின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தப்படுதல் ஆகும்.

**6. தூண்டும் திட்டமிடுதல் :** இது திட்டக்குழு நிர்ணயம் செய்த இலக்குகளை மக்களைக் கொண்டே செயல்படுத்துவதாகும்.

**47. அ)**

**1. பணத்தின் நடுநிலைத் தன்மை :** பணம் நடுநிலைத் தன்மை நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும்.

**2. விகித நிலைத்தன்மை :** பரிவர்த்தனை விகிதங்களில் நிலைத்தன்மை ஏற்படுவது பன்னாட்டு வாணிபத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**3. விலையை நிலையாக இருக்கச் செய்தல் :** விலையில் நிலைத்தன்மை மிதமான விலை ஏற்றம் பொருளாதார வளர்ச்சியின் ஊக்க சக்தியா க இருக்கும்.

**4. முழு வேலைவாய்ப்பு நிலையை அடைதல் :**1936-ல் கீன்சின் வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணத்திற்கான பொது கோட்பாடு என்ற நூல் முழு வேலைவாய்ப்பு என்ற பணவியல் கோட்பாட்டின் குறிக்கோளை முன்னிலைபடுத்தியது.

**5. பொருளாதார வளர்ச்சி :** நீடித்த பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையின் முக்கிய நோக்கமாகும்.

**6. செலுத்து சமநிலையில் சமநிலையை பராமரித்தல் :** உலகப் போருக்குப் பின்னர் வாணிப சமனற்ற நிலை தோன்றின. இது பொருளாதாரத்தின் மற்ற குறிக்கோளை அடையும் திறனை குறைக்கும்.

**47. ஆ)**

| தேவை (X) | விற்பனை (Y) | dx(A=31) X-A (X-31) | dy(B = 26) Y-B (Y-26) | $d_x^2$ | $d_y^2$ | $d_xd_y$ |
|---|---|---|---|---|---|---|
| 23 | 18 | -8 | -8 | 64 | 64 | 64 |
| 27 | 22 | -4 | -4 | 16 | 16 | 16 |
| 28 | 23 | -3 | -3 | 9 | 9 | 9 |
| 29 | 24 | -2 | -2 | 4 | 4 | 4 |
| 30 | 25 | -1 | -1 | 1 | 1 | 1 |
| 31 | 26 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 33 | 28 | 2 | 2 | 4 | 4 | 4 |
| 35 | 29 | 4 | 3 | 16 | 9 | 12 |
| 36 | 30 | 5 | 4 | 25 | 16 | 20 |
| 39 | 32 | 8 | 6 | 64 | 36 | 48 |
| **ΣX = 311** | **ΣY = 257** | **Σ(X-A) = 1** | **Σ(Y-B) = -3** | **$\Sigma dx^2 = 203$** | **$\Sigma dy^2 = 159$** | **Σdxdy = 178** |

$\overline{X} = \frac{\sum X}{N} = \frac{311}{10} = 31\frac{1}{10}$ ,

$\boxed{A = 31}$ $X - A \Rightarrow 31$

$\overline{Y} = \frac{\sum Y}{N} = \frac{257}{10} = 25\frac{7}{10}$ ,

$\boxed{B = 26}$ $Y - B \Rightarrow 26$

$N = 10, \ \sum X = 311, \sum Y = 257$

$\sum dx = (\sum X - A) = 1, \sum dy = (\sum Y - B) = -3,$

$\sum dx^2 = 203, \sum dy^2 = 159, \sum dxdy = 178$

$$r = \frac{N\sum dxdy - (\sum dx)(\sum dy)}{\sqrt{N\sum dx^2 - (\sum dx)^2}\sqrt{N\sum dy^2 - (\sum dy)^2}}$$

$$= \frac{10 \times 178 - (1)(-3)}{\sqrt{10 \times 203 - (1)^2}\sqrt{10 \times 159 - (-3)^2}}$$

$$= \frac{1780 + 3}{\sqrt{2030 - 1}\sqrt{1590 - 9}} = \frac{1783}{\sqrt{2029}\sqrt{1581}}$$

$$= \frac{1783}{(45.044)(39.761)} = \frac{1783}{1790.94}$$

$\boxed{\therefore r = 0.9955}$

www.Padasalai.Net